1986 மே 13]

(ஆ) விதி 112-ன் கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த அறிக்கை, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 112-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 'ஸ்டான்லி மருத்துவமனை அருகிலே உள்ள ரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் திட்டம் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. செல்வராசன் அவர்களது வினா எண். 545-க்கு வரிசை எண் 2157 இப்பேரவையில் 8—7—1985 அன்று துணை வினாக்களுக்கு விடை அளிக்கும்போது கீழ்க்காணும் பதில் என்னால் அளிக்கப்பட்டது.

"எனவே மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சப்வே கட்டுகிறார்கள். அதற்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ரூபாய் 10 இலட்சம் இப்போது ஒதுக்கப்பட்டு அந்த வேலை துவங்க இருக்கிறது. எனவே இரண்டுமே செய்கிறார்கள். இதில் யாருக்கும் வருத்தம் இருக்காது என்று கருதுகிறேன். இந்த சப்வே மக்கள் நடந்து செல்வதற்காக, மேம்பாலம் என்பது வாகனங்கள் செல்வதற்காக. மேம்பாலம் கட்டுவதற்கு அதிகத் தொகை ஆகும். அதிலே பாதியை மத்திய அரசாங்கமும், மீதிப் பாதியை நாமும் போட்டுக் கொள்வோம். அந்த அடிப்படையில் தான் மேம்பாலம் கட்டப்படுகிறது. எனவே, மத்திய அரசாங்கத்திலிருந்து எப்போது நிதி கிடைக்கிறதோ, அப்போது தான் இந்த வேலை தொடங்கப்படும். மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் சப்வே மாநகராட்சியினுடைய சார்பாக இருக்கிற காரணத்தினால் ரூபாய் 100 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டு இருப்பதாக எனக்கு குறிப்பு தரப்பட்டு இருக்கிறது. இதிலே, ஏறத்தாழ 1 கோடி ரூபாய் செலவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது''.

மேற்கண்டவாறு கூறிய விடையை கீழ்க்கண்டவாறு திருத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

''சென்னை ஸ்டான்லி மருத்துவமனை அருகேயுள்ள இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக, ரயில்வே சுரங்கப் பாதை (ரயில்வே அண்டர் பிரிட்ஜ்) கட்ட சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தோராயமாக ரூபாய் 100 லட்சம் தேவைப்படும் என மதிப்பீடு திட்டம் பார்ட்-2 ஸ்கீமில் நடப்பு அண்டில் சேர்க்கப்பட்டு, நடைமுறை நியதிகளின் படி ரயில்வேக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகைக்காகவும், குடிநீர்க் குழாய்கள், மின் வாரியம் மற்றும் தொலைபேசி இலாக்

[1986 மே 13

காக்களின் கம்பிகள் ஆகியவற்றை மாற்றி அமைக்கும் பணிக்காகவும் ரூபாய் 10 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் முதற்கட்டமாக இத்திட்டத்தின் ஸ்தல வரைபடங்கள் , திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணி துவங்கப்படும்.''

6. கவன ஈர்ப்புகள்.

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவரி வசூல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், கோ. வீரய்யன், மா. மணிமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவரி வசூலில் வயல்களில் சிகப்புக் கொடி நட்டு அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதினால் அம்மாவட்ட விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சிறு உழவர்களிடமிருந்தும், வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் உழவர்களிடமிருந்தும் வலுக்கட்டாயமாக நிலவரி வசூலிப்பதில்லை என்ற அரசின் கொள்கை செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுகளில் அடிக்கடி புயல் மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்டதினால் வரி வசூலில் ''மெதுவாகச் செல்லும்'' முறை தஞ்சை மாவட்டத்தில் பின்பற்றப்பட்டதினால் வருடாந்திர நில வருவாயின் கேட்பு சேர்ந்து கொண்டு வந்தது. நிலுவை ரூ. 12.59 கோடியாக உயர்ந்து விட்டது. கடந்த பசலி ஆண்டு 1394 இல் (1984–85) கேட்பு 21.07 கோடி ரூபாயில் ரூ. 7.72 கோடி மட்டும் வசூலிக்கப்பட்டது. அதுவும் கடந்த 12 பசலி ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச வசூலாகும். பசலி ஆண்டு 1395-ன் ஆரம்பத்தில்